# லெபனுன் மீதான இஸ்ரேல் தாக்குதலை நிறுத்த எகிப்து ராஜிய முயற்சி

## சிரியாவைத் தாக்கவும் இஸ்ரேல் திட்டம் தீட்டுகிறதாம்

நியூயோர்க் ஜூன் 26 லெபனுன் மீது இஸ்ரேல் நடத்திவரும் ஆக்கிரமிப்புகளைத் தடுத்து நிறுத்துவதற்கு எகிப்து ராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

இதற்காக அதிபர் அன்வர் சதாத் அரபு நாடுகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாக கூறப்படுகின்றது.

இதேசமயம் இஸ்ரேலுக்கும் லெபனுனுக்குமிடையில் ஏற்பட்டுள்ள பிரச்னைகள் பற்றி ஆராய ஐ. நா. பந்தோபஸ்துசபை இன்று மாலையில் கூடுகின்றது. இதேசமயம் சிரியா மீது இஸ்ரேலியர் தாக்குதல் நடத்தி முன்னேறி வந்து கொண்டிருப்பதாக சிரியா பந்தோபஸ்து சபையில் புகார் தெரிவித்துள்ளது. லெபனுனில் வைத்து சிரியா ராணுவ அதிகாரிகள் ஐவரை இஸ்ரேலியர் பிடித்து வைத்திருப்பது இதற்கு முன்னேடி நடவடிக்கையாகும் என்று சிரியா தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் லெபனுன் மீது நடத்தியுள்ள தாக்குதலைக் கண்டித்துப் சமீபத்தில் சிறைப்பிடித்த சிரியா லெபனுன் அதிகாரிகளை விடுவிக்கும்படியும் கோரும் தீர்மானமொன்று பந்தோபஸ்து சபையில் நிறைவேற்றப்படவிருப்பதாகத் தெரிகின்றது.

### மெயர் கருத்து

இஸ்ரேலியர் காம் பிடித்துள்ள இடங்களிலிருந்து வெளியேறமுடியாதென்று இஸ்ரேலிய பிரதமமந்திரி திருமதி கோல்டா மேயர் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறர். உறுதியற்ற உத்தரவாதங்களின் மீது நாம் பிடித்த இடங்களை விட்டு வெளியேற முடியாதென்று அவர்கள் கூறியுள்ளனர், அரபுக்களுடன் சமமாக இருப்பது இந்த விஷயங்கள் பற்றி விவாதிப்பதையே இஸ்ரேல் விரும்புகின்றது என்று அவர் கூறியுள்ளார்.

## ஷேக்கை அடுத்தமாதம் பூட்டோ சந்திப்பாராம்

கராச்சி, ஜூன் 26 வங்காள தேசப் பிரதம மந்திரி ஷேக் முஜிபுர் ரஷ்மானை சந்திக்க விரும்புவதாக பாகிஸ்தான் அதிபர் திரு. பூட்டோ கூறியிருக்கிறர்.

கராச்சியில் நிருபர்களிடம் பேசிய அவர் ஷேக் முஜிபுர் ரஹ்மானை சந்திக்க விரும்புவதாகக்கூறினர்:

இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியதின் பின்னர் அடுத்தமாதம் வாக்கில் ஷேக்கை சந்திக்கமுடியும் என்று எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் தேசிய சட்டசபையின் அடுத்த கூட்டத்துக்கு முன்னதாக ஷேக்கை தாம் சந்திக்க விரும்புவதாக அவர் கூறினர்.

## மலேசியாவில் சமய உணர்ச்சி

மாவிட்டபுரம், திங்கள் "இன்று எம் நாட்டில் எம் சமயத்துக்குள்ள நிலையிலும் பார்க்க மலேசியாவில் கூடியளவு சமய உணர்ச்சி உண்டு. அங்கு நடைபெறும் சமய விழாக்களில் ஏராளமான மக்கள் கூடி சமய வளர்ச்சிக்கு உழைப்பதனைக் காணக்கூடியதாயுள்ளது".

தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபை நடத்திய பாராட்டு விழாவில் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி மேற்கண்டவாறு கூறினர்.

சைவப்பிரசாரகர் திரு. அ. சரவணமுத்து தலைமையில் இவ்விழா நடந்தது. இவ்விழாவில் முதலில் செல்வி தங்கவடிவேல், தங்கம்மா அப்பாக்குட்டிக்கு பாராட்டிதழ் வாசித்து வழங்கினர்.

சிங்கப்பூரில் தமிழர் வாழும் பகுதிகள் எங்கும் சைவமன்றங்கள் இயங்குகின்றனவென்றும் அவை நல்லமுறையில் சமயப் பணியில் ஈடுபட்டுழைக்கின்றன வென்றும் சமயம் வளர வேண்டுமானுல் சமயப்பணி செய்யவேண்டுமென்றும் அவர் மேலும் கூறினர்.

## மந்திரி வீட்டிற்கு குண்டு வீச்சு!

கொழும்பு, திங்கள் விவசாய அமைச்சர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவவின் வீட்டிற்கு இரு கைக் குண்டுகள் வீசப்பட்டன. அவற்றில் ஒன்று வெடித்ததும். காவலாளி காயமெதுவுமின்றி தப்பினுர்.

இக்குண்டுகள் வீசப்பட்ட சமயம் அமைச்சரும். அவரது குடும்பத்தினரும். வேறு இடத்திற்குச் சென்றிருந்தனர்.

## இவர்கள் அடுத்தமாதம் நாடு திரும்புவர்

உடுப்பிட்டி, திங்கள் எதியோப்பிய அரசாங்கத்துடன் செய்துகொண்ட மூன்றுவருட ஒப்பந்தத்தின் பேரில் எதியோப்பியாவில் கல்வி புகட்டச் சென்ற இலங்கையர் தமது ஒப்பந்த காலம் முடிவுற்று அடுத்த மாத நடுப்பகுதியில் தாயகம் திரும்புகின்றனர். இவர்கள் விரும்பினுல் ஒப்பந்தத்தை மீண்டும் புதுப்பிக்கலாமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று பரீட்சை

யாழ்ப்பாணம், திங்கள் யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலை அனுமதிக்கான நேர்முகப் பரீட்சை இன்று நடைபெறவிருக்கிறது.

மேற்படி கலாசாலையில் கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் பயிற்சி பெறுவதற்காக விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்றுகாலை [illegible]

[மாவை நி]

## வட அயர்லாந்தில் இன்று முதல் அமைதி?

லண்டன், ஜூன் 25 வட அயர்லாந்தில் அமைதி ஏற்படக் கூடிய நிலைமை உருவாகியுள்ளன. போர்நிறுத்தம் மேற்கொள்ள ஐரிஷ் குடியரசு ராணுவத்தின் உத்தியோக பூர்வமான பிரிவு முடிவுசெய்திருப்பது தெரிந்ததே. இந்தப் போர் ஒய்வுக்கான காலக்கெடு முடிவடைவதற்கு இன்னமும் 24 மணிநேரம் இருந்தபோதிலும் வட அயர்லாந்தில் துப்பாக்கிப் பிரயோகம் நின்றபாடில்லை. கத்தோலிக்க மக்கள்வாழும் பகுதிகளிலும் புரட்டஸ்தாந்த மக்கள் வாழும் பகுதிகளிலும் இந்தத்துப்பாக்கிப்பிரயோகங்கள் நடைபெற்றன.

போர் நிறுத்தம் செய்ய முடிவெடுத்தாலும்கூட தாமே விரும்பினுல் தொடர்ந்து எதிர்ப்பு இயக்கத்தை நீடிக்க வலிமையுள்ளது என்பதைக் காட்டவே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை ஐரிஷ் குடியரசு ராணுவம் நடத்திவருவதாகக் கூறப்படுகிறது.

போர் ஒய்வு ஏற்பட்டாலும் குடியரசு ராணுவத்திலிருந்து பிரிந்து சென்றுள்ள பிரிவினர் தொடர்ந்தும் கம் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவார்கள் என்று கருதப்படுகின்றது.

எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறுமானுல் அமைதி சாத்தியமாகப் போவதில்லையென்று ஐரிஷ் ராணுவத்தின் உத்தியோகபூர்வமான பிரிவின் உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார்.

## சிறிமா திட்டத்துக்கு சீன ஆதரவு

ஹாங்கொங், ஜூன் 26 இந்து சமுத்திரத்தை அமைதிப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்ற இலங்கையின் முயற்சிக்கு சீன ஆதரவு தரமுன்வந்துள்ளது.

இப்பொழுது பீகிங்கிலிருக்கும் இலங்கைப் பிரதம மந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்காவிடம் இந்த உறுதிமொழியை சீனப் பிரதமர் திரு. சூ-என்லாய் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கா சீனத் தலைநகர் வந்து சேர்ந்தபொழுது அவருக்கு ஆமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

## ரயிலில் சென்ற பிரயாணி பாலத்தில் மோதி மாண்டார்

ஆனைக்கோட்டை, திங்கள் நேற்றுக்காலை சேட்டை ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்ட யாழ்தேவியில் பிரயாணஞ்செய்த நபர் கல்முனைவுக்கு அருகே விபத்துக்குள்ளாகி பரிதாபமாக மாண்டார்.

மரணமானவர் யாழ்ப்பாணத்துக்கான டிக்கட்டை வைத்திருந்தார். இவர் கல்முனை புகையிரத நிலையத்தில் இருந்து இருமைல் தொலைவில் இருந்த சிற்றுறு ஒன்றின் பாலத்தில் தலை மோதியதினுல் மரணமானர்.

மரணமானவர் மிதிபலகையில் நின்று பிரயாணம் செய்தபோதே இவ்வாறு நடந்தது.

சிமெந்து தொழிற்சாலையில்

## களவாடிய பொருளுடன் பிடிபட்டனராம்

மாவிட்டபுரம், திங்கள் காங்கேசன்துறைசீமெந்து தொழிற்சாலையில் இருந்து களவாடிய இருவரை தொழிற்சாலை பாதுகாப்புச் சேவை உத்தியோகத்தர் கையும் மெய்யுமாகப் பிடித்தனராம்.

மேற்படி தொழிற்சாலையின் ஊழியர்கள் இருவர் தொழிற்சாலையில் இருந்து இரவு 9 மணியளவில் 2000 ரூபா பெறுமதியான செப்புக்கேபிள்களைக் களவாடியபின் அதைக் கொண்டுசெல்கையில் சேவையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களான மி. அழகசுந்தரம், வி. நடராசா எஸ். வேலாயுதம் ச. மகேந்திரன் எஸ். நாகராசா ஆகியோர் பொருட்களுடன் இருநபரையும் பிடித்ததாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைப்பொலிஸில் ஒப்படைக்கப்பட்ட இந்நபர்கள் தற்சமயம் பொலிஸ் விசாரணைக்கும் உடுத்தப்பட்டதுடன் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். பொலிசார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்

பிரஸ்தாப இரு நபர்களையும் பொலிசார் மல்லாகம் நீதிபதி ஐ. சிவானந்தன் முன் ஆஜர் செய்த சமயம் நீதிபதி இம்மாதம் 30-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

••••••

யாழ்ப்பாணம், திங்கள் திருநெல்வேலி சந்தியிலுள்ள கடை ஒன்றில் முன்பு நேற்று முன்தினம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சைக்கிளை மிகவும் தந்திரமான முறையில் வாலிபர் ஒருவர் திருடிச் செல்ல முயன்றுராம். ஆனுல் அங்கு நின்ற சிலர் இவரை கையும் மெய்யுமாக பிடித்து திருநெல்வேலி கிராமச் சேவையாளர் திரு எஸ். மயில்வாகனத்தின் உதவியோடு நல்லூர் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டாராம்.

ரா]

## பண்ணிசை வேந்தருக்கு பாராட்டு

சுழிபுரம், திங்கள் பண்டாரப்பாடுகள் போல் ஆலயங்களில் திருமுறைகள் ஓதுக்கப்பட்ட காலத்தில் திருவருள் நிறைந்த திருமுறைகளைப் பாடவும் பலருக்கு தக்க பயிற்சி கொடுத்தும் எமக்கு பணியாற்றிய ஓதுவாமூர்த்தி பி ஏ எஸ் இராசசேகரன் அவர்களின் பணியை என்றும் மறவோம். பாராட்டி எமது நன்றியையும் தெரிவிக்கின்றேம்.

இவ்வாறு சித்தன்கேணி மகாகணபதிப்பிள்ளையார் ஆலய மண்டபத்தில் பண்ணிசைவேந்தர் பி ஏ எஸ் இராசசேகரனுக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசாரவிழாவில் பேசிய முதல்வர் செ. சின்னத்தம்பி குறிப்பிட்டார்.

திரு. மு. அருணசலம் தலைமையில் செல்வமணி க. சிவானந்தனின் பண்ணிசையுடன் விழா ஆரம்பமாகியது. பண்டிதர் க. சுப்பிரமணியம் வரவேற்புரை கூறினர். கோப்பாய் ஆசிரியர் கல்லூரி அதிபர் எஸ். சிவசுப்பிரமணியம் பி ஏ எஸ் இராசசேகரனுக்கு பொன்னுடை போர்த்தி பாராட்டுரை வழங்கினர். நிலையக்குரல் சிறப்பிதழ் ஒன்றை இறம்ஆசிரியர் திரு க. வாமதேவன் வெளியிட்டுவைத்தார். அடுத்து சி விஞசித்தம்பி சி கார்த்திகேசு மூ. செ. கந்தையா ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

## சிரசில் இளநீர் அபிஷேகம்

யாழ்ப்பாணம், செவ்வாய் நல்லூர் கன்றுவடும் சிவபூவைரவர் ஆலயத்தில் நடைபெற்ற ஆனி உத்தர திருக்கல்யாண விழாவில் பரமானந்தம் சுவாமி நூற்றுக்கணக்கான இளநீர்களைத் தமது சிரசில் அடித்து அபிஷேகம் செய்தார். இவ்விழாவில் உரையாற்றிய யாழ். உதவி மேயர் திரு. க. துரைராஜசிங்கம் 'ஈழத்துத் தெய்வீகச் சுடரோளி' என்று பரமானந்தம் சுவாமியைப் புகழ்ந்து பேசினர்.

••••••

## கமிட்டி உறுப்பினர்

மாவிட்டபுரம், திங்கள் யாழ். பல்தொழில் நுட்ப நிலையத்தில் பொறியியல் மாணவர்மன்ற நிர்வாகிகள் தெரிவுக் கூட்டம் கல்லூரியில் நடைபெற்ற சமயம் உப அதிபர் ராஜேந்திரா இக்கூட்டத்தைத் தொடக்கி வைத்தார்.

பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: செல்வன் இ. யோகராசா, காரியதரிசி: எஸ். சிவயோகநாதன், உப தலைவர்: கி. துரைசிங்கம், உப காரியதரிசி: வி. [illegible] பொருளாளர்: [illegible] நடராசா.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

